# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

*********************

## அகில இலங்கை ரீதியாக 300 மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப்பரிசில்

2023 மே 18ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் உயர் தரம் கற்கும் 300 பாடசாலை மாணவர்களுக்கு சிறப்புமிக்க மகாத்மா காந்தி புலமைப் பரிசில், உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே, கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜெயந்த மற்றும் கல்வித்துறை இராஜாங்க அமைச்சர் கௌரவ அ.அரவிந்தகுமார் ஆகியோரால் வழங்கப்பட்டன.

**2.** இந்த புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தகுதி அடிப்படையில் முதல் ஆறு இடங்களையும் பெற்று உயர் தரம் கற்கும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 2500 ரூபா (இலங்கை) வீதம் வழங்கப்படும். 2021-22 காலப்பகுதியில் கொவிட் பெருந்தொற்று ஏற்பட்டிருந்தமை காரணமாக இவ்வருடம் இரண்டு தொகுதியினருக்கான புலமைப் பரிசில்கள் சம நேரத்தில் வழங்கப்பட்டன.

**3.** இச்சாதனைகளுக்காக மாணவர்களை வாழ்த்திய உயர் ஸ்தானிகர், இரு நாடுகளிலும் உள்ள இளைஞர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக கல்வித் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தினார். அத்துடன் புத்த பெருமானுக்கும் மகாத்மா காந்திக்கும் இடையிலான ஒற்றுமைகள் குறித்து குறிப்பிட்டிருந்த அவர், அதிவேகமாக மாற்றமடைந்து வரும் இந்த உலகில் மகாத்மா காந்தியின் கோட்பாடுகளின் பொருத்தப்பாட்டினை சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மிகவும் நெருக்கமான கலாசார உறவுகளை குறிப்பிட்ட அவர், கல்வித் துறையில் துரித மாற்றங்களை கண்டு வரும் இந்தியாவில் காணப்படும்

சகல வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு இளம் மாணவர்களிடம் அழைப்பு விடுத்திருந்தார். அது மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் இந்தியா இலங்கை ஆகிய நாடுகளின் பலத்திற்கு இலங்கையின் இளம் மாணவர்கள் சிறந்த மூலாதாரமாக இருப்பார்கள் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

**4.** மகாத்மா காந்தி புலமைப் பரிசில்கள் மட்டுமல்லாது **IIT** உள்ளிட்ட பல்வேறு சிறப்புமிகு கல்வி நிறுவனங்களிலும் வழங்கப்படும் புலமை பரிசில்களுக்காக அமைச்சர் கௌரவ கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்கள் இந்திய அரசாங்கத்திற்கு நன்றியினை தெரிவித்திருந்ததுடன், இலங்கையின் மனித வள அபிவிருத்தியில் இவ்வாறான முயற்சிகள் மிகவும் முக்கியமானவை என்றும் குறிப்பிட்டார். அத்துடன் கல்வி தொடர்பாக மகாத்மா காந்தி அவர்கள் கொண்டிருந்த சிந்தனைகள் மற்றும் கோட்பாடுகளுக்காக மகாத்மா காந்திக்கு அமைச்சர் தனது மரியாதையினையும் செலுத்தினார். மேலும் பாடசாலை மாணவர்களுக்காக இலங்கையில் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு இந்தியா வழங்கிய ஆதரவுக்காகவும் அவர் நன்றியினை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**5.** மகாத்மா காந்தி புலமைப் பரிசிலுக்கு அப்பால் தொழில்நுட்பம், பொறியியல், கலைத்துறை, விஞ்ஞானம், சுதேசிய மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் 210 புலமைப் பரிசில்கள் இலங்கை மாணவர்களுக்காக வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் தொழில்திறனை வளர்ப்பதற்காக இலங்கை அரச உத்தியோகத்தர்களுக்காக **ITEC** திட்டத்தின் கீழ் 400 புலமைப் பரிசில்கள் முழுஅளவிலான அனுசரணையுடன் வழங்கப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் "Study in India" நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இலங்கை மாணவர்களுக்கு பல்லாயிரக்கணக்கான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமை மேலும் குறிப்பிடத்தக்கதாகும்.

**********

கொழும்பு
19 மே 2023